பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர்: 15] சென்னை: ஆனி 8உ (22—6—67) வியாழன் ★ வெளியூர்: ஆனி 9உ (23—6—67) வெள்ளி [இதழ்: 7

# உண்மை அரசியல்வாதிகள் கலவரத்தை நாடமாட்டார்கள்

## அரசியல் மோதல் ஏற்படாமல் தவிர்க்க எல்லாக் கட்சியினரும் முயலவேண்டும்

### சட்டமன்றக் கேள்விகட்கு முதலமைச்சர் அண்ணா தந்த பதில்

சென்னை, சூன் 22—

பறங்கிமலைத் தொகுதியில் போட்டிக் கட்சிகளுக்கிடையே அடிக்கடி நடந்துவருவதாகக் கூறப்படும் அடிதடிகள்—மோதல்கள் குறித்தும், தேர்தல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் குறித்தும் இன்று சட்டமன்றத்தில் பல்வேறு கட்சி உறுப்பினர்களும் கேள்விகள் கேட்டனர். எல்லாவற்றிற்கும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பதிலளித்தார்கள்.

"தேர்தல் நேரத்தில் இது போன்ற சம்பவங்கள் நடந்திருந்த போதிலும், இனிமேலாவது இதுமாதிரியான கலவரங்களில் ஈடுபடாதிருக்கும் நிலைமையை முதலமைச்சர் உருவாக்குவாரா?"

என்று, எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் கேட்டதற்கு,

**" இதனை எல்லாக் கட்சியினருமே சேர்ந்து உருவாக்க வேண்டும் "**

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளித்தார்.

ஆர். நாகசுந்தரம்:—" இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற, '1962-ல் தோற்ற காங்கிரசு வேட்பாளர்கள்தான் காரணம்' என்று கூறப்படுவதும், 'புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். படுத்துக்கொண்டே ஜெயித்ததற்கும் இதுவே காரணம்' என்று கூறப்படுவதும் உண்மையா?"

அண்ணா:—" இது, உறுப்பினரின் கருத்தாக இருக்கலாம்."

வி. எஸ். கோவிந்தராசன்:—" பொதுப் பணித் துறை அமைச்சர் கருணாநிதி அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த நேரத்தில், அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டும், முன்னாள் அரசு அதற்குரிய நடவடிக்கை ஏற்றுக்கொண்டதா? அதுபற்றி இந்த அரசு எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கை என்ன?"

பதில்:—" பறங்கிமலைத் தொகுதியைப்பற்றி முதற் கேள்வி இருப்பதால், அதையொட்டியே துணைக் கேள்விகள் கேட்பது நல்லது; இந்தக் கேள்வி, வேறு தொகுதியைப் பொறுத்ததாகும்."

நெல்லிக்குப்பம் கோவிந்தராசன்: " காங்கிரசு ஆட்சியினரால், கம்யூனிஸ்டு, தி. மு. க. கட்சித் தோழர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகள் 'வாபஸ்' பெறப்படுமா?"

பதில்:—" எந்தெந்த வழக்குகளை வாபஸ்வாங்குவது பொது நன்மைக்கு உகந்ததாக இருக்குமோ அவை, வாபஸ் பெறப்படும்."

சுரேந்திரன்:—" அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்படுபவர்கள் கிரிமினல் குற்றவாளிகள்போல்நடத்தப்படாமல் உயர்ந்தமட்டத்தில் வைத்துப் பரிசீலிக்கப்படுவார்களா?"

பதில்:—" அரசியல் காரணமாக ஏற்பட்ட குற்றங்களுக்குத் தனி அந்தஸ்து தரவேண்டும் என்று உறுப்பினர் கூறுகிறார். உண்மை அரசியல்வாதிகள் இப்படிப்பட்ட கலவரங்களில் ஈடுபடமாட்டார்கள் அரசியலை ஜீரணிக்க முடியாதவர்கள் — அந்த அளவுக்குப் பொறுமையில்லாதவர்கள் தாம் இத்தகைய செயல்களில் ஈடுபடுவார்கள். 'சட்டம் தான் ஆளும்' என்று கூறி சனநாயகத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது, இப்படிப்பட்ட பாகுபாடுகளைச்செய்யமுடியாது. மற்ற குற்றங்களைச் செய்பவர்களாவது ஆசை காரணமாக—பாசம் காரணமாக—அல்லது இலாபம் கருதி இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள். அரசியல் கலவரத்தில் ஈடுபடுபவர்களோ, கலவரம் நடந்த பிறகு அதற்காக வருத்தப்படவேண்டியவர்களாவார்கள்."

சீமைச்சாமி:—"தேர்தல் சம்பந்தமாக மட்டும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனைப் பேர்—கட்சிவாரியாக?"

அண்ணா:—"கைதானவர்கள் மொத்தம் 1364 பேர்; கட்சிவாரியாக—தி.மு.க. 915; காங்கிரசு 319; இடதுசாரி கம்யூனிஸ்டு 28; திராவிடர் கழகம் 16; ஏனையோர் 84."

சீமைச்சாமி:—"இன்றையப் பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதியைத் தாக்க முயன்ற கோட்டூர் சம்பவம் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?"

அண்ணா:—"இதுபற்றிய விவரம் இப்போது இங்கு இல்லை."

பெ. சீனிவாசன்:—"விருதுநகர்த் தொகுதியில் கள்ள ஓட்டுப் போட்டதாக ஆறு பேர் கைது செய்யப்பட்டார்களே — அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?"

பதில்:—"தனிக் கேள்வி போடவும்."

வி. கே. கோதண்டராமன்:—"முன்னாள் அமைச்சர் இராமையா போட்டியிட்ட தொகுதியில், எங்கள் கட்சித தொண்டர் கொலை செய்யப்பட்டார். வேறு ஒரு தொகுதியில் தி. மு. க. தொண்டரும் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?"

பதில்:—" விவரம் இல்லை."

சுரேந்திரன்:—" இவர்கள்மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்படுமா?"

பதில்:—" வாபஸ் பெறுவது என்பது சனநாயகத்துக்கு வலுவளிக்காது. வாபஸ் பெறக்கூடிய சில வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. சில வழக்குகளில் குற்றம் கடுமையாக இருப்பதால் வாபஸ் வாங்கவில்லை."

# கல்லும் மாலையும்!

எம். எஸ். சிவசாமி:—" தேர்தல் பிரசாரத்தின்போது ஒரு காங்கிரசு மில் முதலாளி, திட்டமிட்டு இன்றைய முதலமைச்சரின் காரில் கல்லெறிந்தது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?"

அண்ணா:—" என்மீது சிலர் கல்லெறிந்தார்கள்; சிலர் மாலையும் போட்டார்கள்; இரண்டையும் ஒன்றாகவே மதிக்கிறேன்."

—சட்டமன்றக் கேள்வி நேரத்தில் (22-6-67)

# ஸ்டேட் பாங்கியில் உண்ணாநோன்பு

## ஏழாவது நாளாகத் தொடர்ந்து நடக்கிறது

சென்னை, சூன் 22—

சேவை அடிப்படையில் துணை ஊழியர்களுக்குத் தரப்படும் ரிகார்டு கீப்பர் வேலை உரிமையைப் பறிக்கும் அளவுக்கு நிபந்தனை விதிக்கும் முறையினை எதிர்த்து சென்னை ஸ்டேட் பாங்கியின் தலைமை நிலையத்தில் இன்று ஏழாவது நாளாகத் தொடர்ந்து உண்ணாநோன்பு நடைபெறுகிறது.

நேற்று உண்ணாநோன்பு மேற்கொண்ட தோழர்கள் ஆர். பெரியசாமி, டி. டேவிட் ஆகியோரிடமிருந்து இன்று பி. ஆர். திருநாவுக்கரசு, என். சகாதேவன் ஆகிய தோழர்கள் பொறுப்பேற்று உண்ணாநோன்பு நோற்கின்றனர்.

நிர்வாகத்தின் போக்கில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை என்றாலும், ஸ்டேட் பாங்கி ஊழியர்—துணை ஊழியர் சங்கத் தோழர்கள் மிகவும் ஆர்வத்தோடும் உறுதியோடும் இருக்கிறார்கள்.

சென்னையில் உள்ள பல்வேறு பாங்கி ஊழியர் சங்கங்களும், தென் பிராந்திய இரயில்வே ஊழியர் சங்கம்—உணவுக் கார்ப்பரேஷன் ஊழியர் சங்கம் போன்ற பல தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு காட்டி வருவதாகத் தெரிகிறது.

# 'காங்கிரசைத் தோற்கடித்த பெருமை தி. மு. கழகத்தையே சாரும்'

## விஷமத்தனமான கூற்றுக்கு செ. கந்தப்பன் பதில்

புதுடில்லி, சூன் 21—

காங்கிரசுத் தலைவரான காமராசரைத் தோற்கடிக்க தி. மு. கழகத்துக்கு வெளிநாட்டுப் பண உதவி கிடைத்ததாகக் கூறப்பட்ட விஷமத்தனமான கூற்றுக்கு நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் தக்க பதிலுரைத்தார்.

**" தமிழ்நாட்டில் காங்கிரசைத் தோற்கடித்த பெருமை, தி. மு. கழகத்தையே சாரும் "**

என அவர் குறிப்பிட்டார்.

காமராசருக்கு எதிராகத் தேர்தலில் வேலை செய்தவர்கள், வாக்குப் பதிவுக்கு பல வாரங்களுக்கு முன்பே வெளிநாட்டுத் தூதுவரகங்களுடன் தொடர்பு கொண்டதாகக் கூறப்படும் புகார் குறித்து துப்பறியும் துறை விசாரித்து வருவதாகவும், இன்னும் விசாரணை முடியவில்லை என்றும், விசாரணையை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படும் என்றும் உள்துறையமைச்சர் சவாண், மக்களவையில் கூறினார்.

காமராசருக்கு எதிராக வேலை செய்தவர்கள், வெளிநாட்டுத் தூதுவரகங்களுடன் தொடர்பு கொண்டதாகச் செய்தித் தாள்களில் செய்தி வெளியிட்டிருந்ததாகவும், அதன்பேரில் விசாரணைக்கு ஏற்பாடு செய்ததாகவும் அவர் கூறினார்.

திரு. உமாநாத் கேட்ட கேள்விக்கு சவாண் பதிலளிக்கையில், 'காமராசரின் சில ஆதரவாளர்கள், அமெரிக்கத் தூதுவரகத்துடன் தொடர்பு கொண்டதாக எனக்குத் தெரியாது' என்றார்.

" காமராசரைத் தோற்கடிப்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வெளிநாடுகளிலிருந்து பண உதவி அளிக்கப்பட்டிருக்கிறது; அவரைத் தோற்கடிக்க எவ்வளவு பணம் செலவிடப்பட்டது என்பதை அரசு அறியுமா?"

என்று கே. என். திவாரி என்பவர் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையில் உள்துறையமைச்சர் சவாண் குறிப்பிட்டதாவது:—

" தி. மு. கழகத்தின் எதிர்ப்பு, அரசியல் அடிப்படையான ஒன்றாகும். செய்தித் தாள்களில் வெளியான செய்திகட்குமேல் வேறொன்றும் தெரியாது."

திருமதி இலட்சுமிகாந்தம்மாள்:— " தமிழ்நாட்டில் காங்கிரசு வேட்பாளர்களைத் தோற்கடிக்க ஏராளமான பணம் செலவிடப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதனையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

செ. கந்தப்பன்:—" வெளிநாட்டுத் தூதுவரகங்கள் சம்பந்தப்பட்டதாகப் பலவாறு கூறப்பட்டுள்ளன. அவற்றையும், பத்திரிகைச் செய்தி அடிப்படையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா?"

சவாண்:—இந்தத் தேர்தலில் வெளிநாட்டுப் பணம் பயன்பட்ட விதம் பற்றிய விஷயம் பொதுப்படையான விசாரணைக்குரியது. காமராசர் விஷயத்தில் கவனம் செலுத்தியது, முக்கியத் தலைவர்கள் தேர்தலில் வெளிநாட்டுத் தூதுவரகங்கள் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டதால்தான."

# 'பண்டாவின் பேச்சைப் பொருட்படுத்தவில்லை'

## இலங்கை அரசுக்கு தி. மு. க. பற்றி தவறான எண்ணம் இல்லை

### சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, சூன் 22—

தமிழ்நாட்டில் இயங்கும் ஆட்சி பற்றி இலங்கையின் முன்னாள் தலைமையமைச்சரான திருமதி சிரிமாவோ பண்டார நாயகா செய்துவரும் தவறான பிரச்சாரம் குறித்து, இன்று சட்டமன்றத்தில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்ட அவசரக் கேள்வி ஒன்றுக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளிக்கையில், 'திருமதி பண்டார நாயகாவின் பேச்சை இந்த அரசு பொருட்படுத்தவில்லை' என்று இரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்தார்.

இதுபற்றி மேலும் கேட்கப்பட்ட கேள்விகட்கு அண்ணா அவர்கள் அளித்த பதிலாவது:—

"திருமதி பண்டாரநாயகாவுக்குப் பத்திரிகைவாயிலாகப் பதிலளிக்க வேண்டிய தேவையே எழவில்லை. இலங்கையில் உள்ள அரசு இப்படித் தவறான பிரசாரம் செய்யுமானால், இங்குள்ள தூதுவரகத்தின்வாயிலாக மறுப்புத் தெரிவிக்கச்

(4-ம் பக்கம் பார்க்க)

# வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்துக்கு நடவடிக்கை

## விலைக் குறைப்புக்குத் திறவுகோலாக உணவுப் பொருள் விலைக் குறைப்பு

தங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ள மக்களின் நலனிற்கு இன்றியமையாதவை எனத் தாங்கள் கருதுகின்ற கொள்கைகளைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகள் எவ்வளவு கடுமையான எல்லைகளுக்கு உட்பட்டு இயங்கவேண்டிய நிலையில் உள்ளன என்பதை, இப்பொழுதே உங்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த அரசு எந்தக் கொள்கைகளை மக்கள்முன் வைத்து, இம்மாநில ஆட்சியை ஏற்று நடத்தும் பொறுப்பை மேற்கொண்டதோ, அக்கொள்கைகளை இத்தகைய வரையறைகள் இருப்பினும், உளமாறச் செயல்படுத்த முற்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் உறுதியான நம்பிக்கை.

மாநில அரசிற்குக் கிட்டுகிற இச்சொற்ப நிதி வசதிகளுக்கும் அதிகாரங்களுக்கும் உட்பட்டே வரவு-செலவுத் திட்டம் ஒன்றைத் தீட்டி, அதன் வாயிலாக இன்றைய நமது பொருளாதார நிலையில், இன்றியமையாதவையென நாம் கருதுகிற கொள்கைகளைச் செயல்படுத்த நாங்கள் முயற்சி செய்துள்ளோம்.

கடந்த பத்தாண்டுகளாக, பெரிய வளர்ச்சிப் பணிகளுக்காக பெருத்த அளவில் செய்யப்படும் முதலீடுகளுக்குமேல், ஏராளமான இராணுவச் செலவினங்களும் சுமத்தப்பட்டதன் காரணமாக, குறிப்பாக 1962—63 முதல் விலைவாசிகள் நஞ்சுபோல் ஏறிவந்துள்ளன! இதுவே இந்தியப் பொருளாதாரத்தின் இன்றைய அடிப்படைக் குறைபாடாகும்!

நமது சமுதாயத்தின் பெரும் பகுதியினருக்கு—குறிப்பாக அரசு ஊழியர்கள், முறையான தொழில் நிறுவனப் பணியாளர்கள், பண்ணையாட்கள் போன்றவர்களுக்கு—விலைவாசிகளின் கூரிய ஏற்றமே பெரும் இன்னலை விளைவித்துள்ளது!

அனைத்திந்திய மொத்த விற்பனை விலைக் குறியீட்டு எண் 1964—65-ல் 8.7 சதவீதமும், 1965—66-ல் 15.2 சதவீதமும், 1966—67-ல் 16.5 சதவீதமும் உயர்ந்துவந்துள்ளது.

உணவுப் பொருட்கள் குறித்த இக்குறியீட்டு எண் 1964—65-ல் 9 சதவீதமாகவும், 1965—66-ல் 14.1 சதவீதமாகவும், 1966—67-ல் 24.1 சதவீதமாகவும் உயர்ந்தது.

உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் உயர்ந்ததால், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பொருள்களின் உற்பத்திச் செலவுகளும், ஊதிய உயர்வு—அகவிலைப் படி உயர்வு போன்ற ஏனைய வடிவங்களின் வாயிலாக மேலும் உயர்ந்தன!

விலைக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பண்டங்கள் குறித்தும் அவற்றின் உற்பத்திச் செலவுகள் மிக அதிகரித்ததால், அவற்றின் விலைவாசிகளையும் அரசு உயர்த்தவேண்டிவந்தது!

விலைக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட சில துணி ரகங்களின் விலைகளை, 1966 செப்டம்பரில் 6 சதவீத அளவிலும், 1967 ஏப்ரலில் மீண்டும் 4·5 சதவீத அளவிலும் உயர்த்த மத்திய அரசு ஒப்புக்கொள்ள வேண்டியிருந்ததை இம்மன்றம் உணர்ந்திருக்குமென நினைக்கின்றேன்.

மற்றும், உருக்கு, சர்க்கரை இவற்றின் விலைகளையும் உயர்த்தவேண்டிவந்தது.

விலைவாசிகளின் உயர்வால் அரசிற்கு ஏதோ கூடுதல் வருவாய் கிட்டினாலும், அகவிலைப் படி உயர்வு போன்ற இனங்களின்கீழ் அதிகச் செலவுகள் நேரிடுகின்றன,

இச்செலவினங்களின் விளைவாக, ஆதாயம் பெரிதும் அடைமக்கூடிய திட்டங்களுக்குச் செய்யும் முதலீடு குறைக்கப்பட வேண்டியிருப்பதால், பொருளாதார வளர்ச்சி வீதம் குறைகிறது.

உணவுப் பொருள்களின் விலைகள் உயர்வதால், ஏழை மக்கள்—நடுத்தர வகுப்பினர் ஆகியோரின் வாங்கும் ஆற்றலும் குன்றிவிடுகிறது.

நமது பெரிய தொழில்கள் சிலவற்றில், தொழில் மந்தமும் வேலையின்மையும் தோன்றுவதற்கு உணவுத் தானிய விலைவாசிகள் ஏறுமுகமாயிருப்பதையே ஏற்றதொரு காரணமாகக் காட்டலாம்.

புத்துயிரும் புது மெருகும் பெற்று மிளிரும் புதியதோர் பொருளாதார அமைப்புக்கு, உணவுப் பொருள்களின் விலைவாசிக் குறைப்பே திறவுகோலாக அமையுமென்பது இவ்வரசின் அழுத்தமான கருத்தாகும்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நாளடைவில் விலைவாசிகளின் உயர்வைக் குறைத்துவிடலாம் என்றும், இதற்கு முன் என்றுமே இல்லா வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய வறட்சியே விலை உயர்வுக்குக் காரணமென்றும் பேசுவது பயனற்ற வாதமாகும்.

உற்பத்திப் பெருக்கத்தின் வாயிலாகவே நாளாவட்டத்தில் விலைவாசிச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்பதும், எனவே உற்பத்திப் பெருக்கத்திற்கான ஏற்பாடுகளில் நமது நாட்டத்தைச் செலுத்த வேண்டுமென்பதும் நாம் அறியாதவை அல்ல.

ஆனால், இந்த நீண்டகாலத் திட்டங்கள் நல்ல பயனளித்து—அவை இன்றைய நம் இடும்பை தீர — நிலையான தீர்வு ஒன்றைக் காட்டும்வரை நம்மால் பொறுத்திருக்க இயலாது-

உணவுப் பண்டங்களின் விலைவாசிச் சிக்கலைத் தீர்க்க நாம் உறுதியோடு இன்றே — இன்னே செயல்பட வேண்டும்; அப்போது தான், விலைவாசி ஏற்றத்தால் ஆற்றாது அல்லற்படும் மக்களுக்கு அவர்கள் ஏங்கித் தவிக்கும் துயர் தணிப்பு உடனடியாகக் கிட்டும்! அத்துடன், 'விலையேற்றம்—செலவேற்றம்' என்கிற இந்த நச்சு வட்டத்தின் உயிர்நாடியையும் தகர்த்தெறிய முடியும்!

தானாகவே நிலைத்துவிடும் இயல்பு வாய்ந்த இன்றையப் பணவீக்க மனோநிலையை, இத்தகைய துணிச்சலான கொள்கையின் துணைகொண்டே கடக்க முடியும்.

*—தமிழக அரசின் 1967—68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்*

### அண்ணாவின் பட்ஜெட்—[2]

# ஓர் பொருளாதாரக் கண்ணோட்டம்!

"இந்தியப் பொருளாதாரத்தில் தங்கு தடைகளும், குற்றங்குறைகளும் மலிந்து கிடக்கும் ஒரு பாதகமான சூழ்நிலையில், தமிழகத்தில் கழகம் ஆட்சிக்கு வந்திருப்பது கனிவுடன் கவனிக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்" என்று ஆங்கில நாளிதழ் ஒன்று, வேறொரு பிரச்சினை பற்றி எழுதியுள்ள தலையங்கத்தின் கருத்தினையே, முதலமைச்சர் அண்ணா அவர்களின் நிதிநிலை அறிக்கையின் நுழைவுவாயிலாகக் கருதலாம்.

"சுமையுடன் நீரில் இறங்கி நீந்தி வா—மறு கரைக்கு" என்று கூறுவதும் சரி—"பணவீக்கமும் பற்றுக்குறையும் மிகுந்த பொருளாதார நிலையில்—கடன் தொகை மலிந்த மாநில அரசின் நிர்வாகத்தினைக் கொடுத்து—நிதி நிலை அறிக்கையினைத் தயார் செய்" என்று கூறுவதும் சரி!

அதிலும் குறிப்பாக, அதிகாரக் குவியல்களைப் பெற்ற அரசியல் அமைப்பில் வருவாய் இனங்கள் நிறையப் பெற்றிருக்கும் மத்திய நிர்வாகத்தின் கீழ் இருக்கும் மாநிலம், மக்கள் விரும்பும் பட்ஜெட்டைத் தயாரிப்பதென்பது, போரினால் சீரழிந்த பொருளாதாரத்தைச் சீர் செய்வதை விடக் கடினமான செயலாகும்.

ரூ. $5\frac{1}{4}$ கோடிக்குப் புதிய வருவாய் தரும் இனங்களைக் கண்டறிந்த பின்னரும், ஒரு கோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாய் துண்டு விழும் நிதிநிலையைத்தான் வெளியிட முடிந்திருக்கிறது என்பது, புதிய அமைச்சரவை பதவியேற்ற மூன்றே மாதங்களில் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகளை மிகத் தெளிவாகக் காட்டுவதாக இருக்கிறது—

1. சமுதாய நீதி—
2. பொருளாதாரச் சமநிலை—
3. தேர்தல் உறுதிகள்—
4. பின்தங்கியவர்கட்குப் புதிய உதவிகள்—

என்ற நிறைவுகளைக் கொடுப்பதற்குப் புதிய அமைச்சரவை,

1. விலைவாசி ஏற்றம்—
2. பற்றுக்குறை—
3. பணவீக்கம்—
4. குறைந்த அதிகாரங்கள்—
5. மெலிந்த பொருளாதாரம்—

ஆகிய இடர்ப்பாடுகளுக்கு மத்தியில்தான் கடமை ஆற்ற வேண்டியதிருக்கிறது!

மாநிலங்களைக் கொண்டதுதான் மத்திய அரசு என்றாலும், வருவாய் – செலவு என்று வரும்போது, அது, சுயநலப் போக்கிலோ அல்லது பொதுநலம் கருதாமலோதான் செயல்பட்டிருக்கிறது என்பதனை அண்ணா அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

இந்த நாடு சுதந்தரம் அடைந்தபோது, மாநில அரசுகள் மத்திய அரசுக்குப் பட்டிருந்த கடன் தோகையின் மொத்த மதிப்பு 43 கோடியே 97 இலட்ச ரூபாய் மட்டுமே; ஆனால் நடந்த ஆண்டில், இத்தொகை, ரூ. 5,000 கோடியாக வளர்ந்திருக்கிறது!

தமிழகத்தைப்பற்றி மட்டும் தனியாகப் பார்க்கும்போது, இந்த மாநிலம், 1950-ம் ஆண்டில் மத்திய அரசுக்குப் பட்டிருந்த கடன் 12 கோடியே 30 இலட்ச ரூபாய்; இப்போது அத்தொகை, ரூ. 300 கோடிக்கு மேல் போயிருக்கிறது!

1950-ல் இந்த மாநிலம் மத்திய அரசுக்குச் செலுத்திவந்த வட்டியின் தொகை, ரூ. 41 இலட்சம் மட்டுமே; இப்போது அது, ரூ. 14 கோடியாக வளர்ந்திருக்கறது!

இராணுவம் — பாதுகாப்பு — பலன் தராத மாபெரும் திட்ட முதலீடுகள் போன்ற செலவினங்களில், மத்திய அரசு வருவாய்களைச் செலவு செய்திருப்பதனால், நாடு முழுவதிலும் பண வீக்கமும், உற்பத்திப் பற்றுக்குறையும் உருவாகியிருக்கிறது!

ஆனால், இதன் விளைவாக எழும் 'விலைவாசியேற்றம்' என்னும் பிரச்சினையைச் சமாளிக்கும் பெரும் பொறுப்பு, மாநில அரசின் 'தலைவலி'யாகிறது!

விலைவாசியைத் தடுப்பதற்காக என்று உடனடியாகப் பலன் அளிக்கும் திட்டங்களை அமுலாக்கும் அளவுக்கு மாநில அரசுகளின் நிதி நிலைகள் இருக்க முடியாது!

அதற்காகப் புதிய வரி இனங்களைப் போடுவதிலும, மாநில அரசுகள் சற்று தாராளமாக இருந்துவிட முடியாது!

இக்கட்டான இந்த சூழ்நிலைகளுக்கிடையில் தான், அடிப்படைத் தேவைகளில் முதலாவ உணவை நகர மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கும் உறுதியை, கழக அமைச்சரவையின் நிதி நிலை, வெற்றியுடன் சமாளித்திருக்கிறது!

உணவு போன்ற தேவைகளுக்காக, மக்களை, நீண்டகாலத் திட்டங்களை எதிர்பார்க்கும் நிலையில் வைக்கக்கூடாது!

> "உணவு விலையேற்றம் என்னும் துயர் உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டும்; அது துணிச்சலுடன் அணுகப் படவேண்டும்"

என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருப்பது, 'அரிசிப் பங்கீட்டுக்கு அரசு உதவி ஏன்?' என்று கேட்பவர்களுக்கு, தக்கதொரு விளக்கமாக அமைந்திருக்கிறது!

மத்திய அரசு தற்காலிக உதவிக்காகக் கை விரித்த நிலையிலும், இப்போதைய அளவிலேயே ஆண்டொன்றுக்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு மூலம் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்தியிருப்பது, அண்ணாவின் அரசியல் கடமை உணர்வினை மட்டுமல்ல—நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கும் திறமையையும் காட்டுகிறது.

முக்கிய துறைகளைத் தேசியமயமாக்குவது என்பது, பொருளாதாரக் கொள்கையாக மட்டுமல்ல—முன்னேடியான அரசுகளின் அரசியல் நியதிகளாகவே இருகிறது.

மூன்று வழிகளில் கழக அமைச்சரவை அறிமுகப்படுத்த இருக்கும் பஸ் துறை தேசியமயமாக்கப்படும் திட்டம், 'சோஷலிசம் பேசுவதில் மூத்தவர்கள்' என்று கூறிக்கொண்ட காங்கிரசுக்காரர்களின் 20 ஆண்டுக் கால ஆட்சிக்குத் தரப்பட்டிருக்கும் சவாலாகும்!

பொதுமக்கள் வசதிக்காக இருக்கவேண்டிய தனியார் பஸ் நிறுவனங்கள், பொருளாதார ஏற்றம் பெற ஈடுபட்ட அரசியல் விளையாட்டுகளுக்கு கழக ஆட்சி வைத்துள்ள துணிச்சலான முற்றுப்புள்ளி, காலத்தினாலும் மறக்க முடியாத சாதனையாகும்!

பற்றுக்குறை நிதி நிலையைச் சரிசெய்வதற்காக என்று கூறி, கட்சிக் கொள்கைக்குப் புறம்பாக—காந்திய வழியை மறந்தவகையில்—மதுவிலக்கினைத் தளர்த்தி அல்லது நீக்கி, பல மாநில காங்கிரசு அரசுகள் வருவாயைப் பெருக்கிக் கொண்டிருக்கும்போது, அதே மதுவிலக்குக் கொள்கையின்மீது இன்னம் சற்று அதிக வரிகளைப் போட்டு, பத்து இலட்சம் ரூபாய் கூடுதல் வருமானத்தைப் பெற, அண்ணாவின் பட்ஜெட் வழி செய்திருக்கிறது!

முத்திரைக் கண்டன வரி விதிப்பில் சீர்திருத்தம், மோட்டார்—ஆடம்பரப் பொருள்களுக்கான வரிகள் மூலம் பெற இருக்கும் வருவாய், கொடுக்க முடிந்தவர்களிடமிருந்துதான் வசூலிக்கப்பட இருக்கிறது. எனவே, பாதகம்—முடியாமை என்ற பிரச்சினைகளுக்கே இடமில்லை!

புன்செய் நில வரி விலக்கு–குறிப்பிட்ட அளவு விற்பனை வரிச் சலுகை முதலியவற்றின் மூலம், கொடுத்த உறுதிமொழிகளும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன!

முடிந்தவர்களிடம் பெறுவது-முடியாதவர்களுக்கு விலக்களிப்பது என்பது பொருளாதாரத் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சமூக நீகி! இதை வலியுறுத்தி, புதிய வரி இனங்களை செல்வந்தர்கள், 'பாரம்' எனக் கருதாது, அறம்–பொறுப்பு எனக் கருதவேண்டும்' என்று அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பது, 'தோல்வியில்லாமல் வெற்றி'–'கண்ணீர் இல்லாமல் வரிகள்' போன்ற வாசகங்களை நினைவுபடுத்துவதாக இருக்கிறது!

நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதில் உள்ள இடர்பாடுகளுக்கு மத்திய அரசைக் காரணம் காட்டியிருப்பதுடன், 'கடமை முடிந்தது' என்று இருந்துவிடவில்லை அண்ணா அவர்கள்!

இந்தியக் கூட்டாட்சியில் இருக்கும் இந்தக் குறைபாட்டுக்கு நிரந்தரப் பரிகாரம் காணும் வகையில், 'நிலையான நிதிக்குழுவினை மத்திய அரசு அமைத்தல் வேண்டும்' என்றும் அவர் கூறியிருப்பது, புதுடில்லியின் சிந்தனைக்கு வரவேண்டும்!

"மத்திய–மாநில அரசுகளின் பொருளாதார நிலை குறித்து அவ்வப்போது மாற்றங்களோ, யோசனைகளோ தெரிவிக்க இந்த நிலைக் குழு நிலையான அமைப்பாக மாற்றப்படவேண்டும்" என்று–ஆஸ்திரேலிய நாட்டு உதாரணத்தை –அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

# மத்திய அரசின் உதவி ஒரேநேரத்தில் கிட்டாததன் விளைவு

## நிலையான அளவுக்குத் திட்டமிட இயலாத நிலைமை

தமிழக அரசின் பெருங்கொள்கைகளில் சிலவற்றைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி வசதிகளை, உள்ள நிலையை அடிப்படையாகக்கொண்டு முழு அளவிற்கும் நிதி வகை செய்யுங்கால், நமது திட்டத்தில் இணைந்து நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட வேலைகளின் விரைவிற்குச் சிறிதும் சுணக்கம் ஏற்படாதிருக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதான எனது உரையில் நான்காம் திட்ட வரைவினை அரசு ஆராய்ந்து அந்தந்தத் திட்ட வேலைகளின் முறைவைப்புகளில் (Priorities) ஏற்றச் சரிக்கட்டல்களைச் செய்யுமெனக் குறிப்பிட்டிருந்தேன்; ஆனால் வருந்தத்தக்கவாறு, நான்காம் திட்டத்தை இறுதி செய்யும் முயற்சி ஏற்கனவே ஓராண்டுக்குமேல் தாமதமடைந்துவிட்டது. அது இன்னும் தேசீய அளவில் நிறைவெய்தாமையால் தேசீயத் திட்டத்திற்கிணக்கமாகவும், அத்திட்டத்தில் பகுதியாக மத்திய அரசு நமக்கு வழங்கக்கூடிய நிதி வசதிகளையொட்டியும், நான்காம் திட்டத்தைத் திருத்தியமைக்கும் பணியை நாம் மேற்கொள்ள இயலவில்லை.

நான்காம் திட்டத்தை முடிவாகத் தயாரிக்கும் பணி அக்டோபர் திங்கள் வாக்கிலாவது நிறைவெய்துமென நம்புகிறேன். அப்போதுதான் நீண்டகாலத் திட்டம் ஒன்றுடன் இணைந்த பகுதியாக, நிலையான அடிப்படையில் அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தைச் செவ்வனே நாம் தயாரிக்க முடியும்.

நாம இப்போது ஐந்தாண்டுத் திட்டக் கட்டுக்கோப்புக்குள் இயங்குவதாகக் கருதப்பட்டாலும், குறுகிய வரம்புள்ள சில நோக்கங்களைக் கொண்ட ஆண்டுத் திட்டங்களை மட்டுமே கடந்த இரு ஆண்டுகளாகத் தீட்டிவருகிறோம். ஆண்டுத் திட்டங்களைக்கூட உறுதியான அடிப்படையில் தயாரிக்க இயலவில்லை.

மாநிலத் திட்டங்களின் குறைந்த அளவுத் தேவைகளைச் சரிவர உய்த்துணர்ந்து, அவற்றிற்குத் தேவைப்படும் நிதி வசதிகளை ஒரேதடவையில் ஒதுக்க மத்திய அரசு முன்வராததே இதற்குக் காரணமாகும்.

மாநிலத் திட்டங்களுக்குரிய மத்திய அரசின் உதவி முதலில் மிகக் குறைந்த அளவில் நிச்சயிக்கப்பட்டு, பின்னால் மாநில அரசுகளின் தவிர்க்கமுடியாத பொறுப்புக்களையொட்டி, அதைவிடச் சற்றுக் கூட்டி உறுதி செய்யப்படுகிறது. இதனால் உரிய அளவிற்கு, நிலையான அடிப்படையில் திட்டமிடுவது மிகக் கடினமாகிவிடுகிறது.

இடைக்கால வரவு-செலவுத் திட்டத்துடன், ரூ. 75.78 கோடி அளவில் அமைந்த இடைக்காலத் திட்டம் ஒன்றையும் அவையின்முன் வைத்தோம். 1966–67-ல் நாம் செய்த செலவின் அளவோடு ஒப்பிடும்போது, 'இது, பெருமளவுக்குக் குறைந்ததுதான். எனினும், இப்போது நிறைவேற்றப்பட்டுவரும் திட்ட வேலைகளின் தேவைகளைக் குறித்தும், இன்றியமையாத சில புதிய திட்ட வேலைகள் குறித்தும் ஆய்வு செய்து, திட்ட அளவை இப்போது ரூ. 85.28 கோடியாக உயர்த்தியுள்ளோம்.

கடந்த நவம்பர் திங்களில் தமிழக அரசு திட்டக் குழுவுடன் நடத்திய விவாதங்களின் பயனாக, திட்டக் குழு தற்காலிக இசைவு அளித்த ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த அளவான ரூ. 564 கோடியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மேற்சொன்ன ஆண்டுத் திட்ட அளவு சற்றுக் குறைவாகவே தோன்றும்.

வேளாண்மை உற்பத்தி போன்ற இன்றியமையாத சில துறைகளில் நமது தேவைகள் பெரும் அளவில் இருப்பினும்—நமது நிர்வாக இயந்திரம் இதைவிட மிகப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முற்றிலும் ஆயத்தமாயிருப்பினும்—நமது பொருளாதாரத்தின் இடர்மிகுந்த சூழ்நிலைகளையும், மாநிலத் திட்டங்களுக்குரிய மத்திய உதவி பெரிதும் குறைக்கப்பட்டிருப்பதையும் கருத்திற்கொண்டு, இயன்றவரை கூடுதல் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம்.

ஆயினும், கடந்த ஆண்டுத் திட்டத்திற்கெனச் செய்த நிதியொதுக்கத்தைவிட, இவ்வாண்டு கூடுதலாக நிதி யொதுக்கம் செய்ய முடிந்த ஒரு சில மாநிலங்களிலே தமிழகமும் ஒன்று என்பதை அறிய, இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள் என நான் நம்புகிறேன்.

இத்துடன், அரசு, நடப்பு ஆண்டுக்குரிய திட்டத்தை வகுக்கையில் நமது பொருளாதாரத்தில் இயங்கிவரும் பணவீக்கச் சக்திகளையும் எண்ணத்தில் இருத்தி, விரைந்து பயனளிக்கும் திட்டங்களில் தனது நாட்டம் முழுவதையும் செலுத்த முற்பட்டுள்ளது.

சிறுபாசனத் திட்டங்களின் துணைகொண்டும், அதிக விளைச்சலைத் தரும் புதியரக விதைகளைப் பெருக்குவதன் மூலமும் போதிய உர வகைகளை உரிய காலத்தில் வழங்குவதன் வாயிலாகவும் வேளாண்மையைப் பெருக்குவதில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டிருக்கிறது.

நமது நிதி வசதிகளை உற்பத்தித் திட்டங்களுக்காகக் கட்டிக்காக்க வேண்டி, கட்டிட வேலைகளில் செய்யப்படும் முதலீடுகளைப் பெரிறும் குறைத்துக் கொண்டுள்ளோம். வழக்கம்போல் பாசன மின்சாரத் திட்டங்களுக்குப் பெரிதும் முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரு துறைகளுக்குமான மொத்த முதலீடுகள், ஆண்டுத் திட்டத்தில் 40 சதவீதமாகும். இத்திட்டங்களை விரையில் முடிப்பதற்காக நாம் இவற்றிற்குத் தந்துள்ள சிறப்பும், இதன் மூலம் ஓரளவிற்கு எதிரொளிப்பதை நன்கு காணலாம்.

சமூகப் பணிகளின்கீழ் நமது தேவைகள் எண்ணற்றவை. நடப்பு ஆண்டைப் போன்ற இடர் மிகுந்த ஓராண்டில், சமூகப் பணிகளைப் பெருக்க வேண்டுவது குறித்து மக்களின் அவாவினையும் தேவைகளையும் முற்றிலும் நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ளோம்.

இருப்பினும், கல்வி—மருத்துவம்—பொதுச் சுகாதாரம் — தூயநீர் வழங்கல் போன்ற வசதிகளைப் பெருக்கும் திட்டங்களைத்தான் பொதுமக்கள் பொருள் நிறைந்த திட்டங்களாகப் போற்றுவார்கள் என்பதை நாங்கள் முற்றிலும் உணர்ந்து, இத்துறைகளில் இயன்றவரை பெருமளவிற்கு வசதிகளைப் பெருக்குவதற்கு வகைசெய்ய முற்பட்டிருக்கிறோம்.

—தமிழக அரசின் 1967–68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்

# பேரா மாநிலத்தில் என். வி. நடராசன்

## அமைச்சர் புசாரைச் சந்தித்து அளவளாவினர்

ஈப்போ, ஜூன் 12—

தமிழகத்து மேலவை உறுப்பினரும், தி. மு. கழக அமைப்புச்செயலாளருமான திரு. என். வி. நடராசன் அவர்களும், திரு. மா. தங்கவேலரும் பேரா மாநில அமைச்சர் புசார் டத்தோ அமாட் பின் சைட் அவர்களை இன்று காலை 9-45 மணிக்கு அவரது அலுவலகத்திலேயே சந்தித்து மரியாதைகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

இவர்களின் சந்திப்பில், பேரா மாநில ம. இ. கா. கிளைத் தலைவர் திரு. வை. பொன்னுசாமி பிள்ளையும் கலந்துகொண்டார்.

"கடந்த இரு தினங்களாகப் பேரா மாநிலத்தைக் கண்டும், அதன் முன்னேற்றங்களை அறிந்தும், அரசு செய்த நன்மைகளைக் கேட்டும் பெருமகிழ்வெய்துகிறோம்; தோட்டத் துண்டால் மும்முரமாக இருந்த நேரத்தில் அதைத் தடுக்க பேரா அரசு சட்டமியற்றியதைக் கேட்டு அகமகிழ்கிறோம்" என்றார் என். வி. நடராசன்.

"மாநில அரசுக்கு மீறியதை மத்திய அரசு கவனிக்கும்" என்றார் அமைச்சர் புசார்.

தேசிய மொழி மசோதாவைக் குறிப்பிட்டு என். வி. நடராசன், தமிழுக்கும்—சீனத்துக்கும் சிறந்த முறையில் பாதுகாப்பளித்தமைக்குத் தாம் மகிழ்வதாக புசாரிடம் தெரிவித்தார்.

"பல மொழி பேசும் மக்கள் வாழ்கிற எங்கள் நாட்டில் நாளடைவில் மற்ற மொழிகளுக்கும் வசதி செய்யப்படும் என்றார்" புசார்.

அதன் பிறகு பேரா மாநிலத்தின் முன்னேற்றங்களைப் பற்றி அறிவிக்கும் நூல் ஒன்றை அமைச்சர் புசார், என். வி. என். அவர்கட்கு வழங்கினார்.

அதற்குப் பதிலாக என். வி. என். அவர்கள், அஜந்தா ஓவியத்தின் அரசிளங்குமரி சிலை ஒன்றை புசார் அவர்களிடம் வழங்கினார்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தருமாறு பேரா அமைச்சர் புசார் அவர்களுக்கு அன்பழைப்பு விடுத்தார்.

என். வி. என். அழைப்பிற்கு மகிழ்ச்சிப் புன்னகை புரிந்தார் புசார்.

# ஈப்போவில் என்.வி. நடராசன்

## கேடயம் வழங்கி வரவேற்றது நகராட்சிமன்றம்

ஈப்போ, ஜூன் 12—

"ஈப்போ நகராட்சியின் வளர்ச்சியை அறிந்துகொள்வதற்காக, வெளிநாட்டினரை ஈப்போ என்றும் வரவேற்கும்"

என்று நகராட்சி உறுப்பினர் திரு. சியூ பெங்லூன் கூறினார்.

திரு. என். வி. நடராசன், திரு. மா. தங்கவேலர் ஆகியோருக்கு ஈப்போ நகராட்சி இன்று அளித்த வரவேற்பில் எதிர்க் கட்சிகளின் சார்பில் பேசியபோது அவர் இவ்வாறு கூறினார்.

வரவேற்பு விழாவுக்குத் திரு. டி. ஆர். சீனிவாசகம் தலைமை தாங்கினார்.

அறிஞர் அண்ணா ஈப்போ நகராட்சிக்கு வருகை புரிந்ததை நினைவுகூர்ந்த திரு. டி. ஆர். சீனி, 'அண்ணா தற்போது முதலமைச்சராக இருக்கிறார்' எனக் கூறினார்.

நகராட்சியின் மலிவு வீடு திட்டமும், வரி செலுத்துபவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வசதிகளும் அவ்விரு விருந்தினர்களையும் பெரிதும் கவர்ந்தன.

"இவை, நகராட்சி உறுப்பினர்களின் அயரா உழைப்புக்கு ஒரு சான்றாகும்" என்று திரு. என். வி. நடராசன் கூறினார்.

நகராட்சியின் சின்னம் பொறிக்கப்பட்ட கேடயம் ஒன்றை, டத்தோ சான் சுவிஹோ, நகராட்சியின் சார்பில் திரு. என். வி. நடராசனுக்கு வழ்ங்கினார்.

# பினங்கு முதல்வருடன் சந்திப்பு

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பினங்கு முதலமைச்சர் டத்தோ ஒங் பௌஙீ அவர்களைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு 5—6—67 காலை 10-மணிக்கு நடைபெற்றது.

ஏறத்தாழ ஒரு மணி நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

இந்திய மக்களின் வாழ்விலும், தமிழக மக்களின் வாழ்விலும், சிறப்பாக அறிஞர் அண்ணா அவர்களின் பண்பாட்டையும் திறமையையும் பாராட்டினர் பினங்கு முதலமைச்சர்.

# லாட்டரிச் சீட்டு வாங்காதீர்!

## போலீசு எச்சரிக்கை

சென்னை, ஜூன் 20—

"விற்பனை செய்ய அரசின் அனுமதி பெறாத லாட்டரி டிக்கெட்டுகளைப் பொதுமக்கள் வாங்கவேண்டாம்"

என, போலீசுத் துணை ஆணையர் பழனியப்பன் பொதுமக்களுக்கு விழிப்பூட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"அரசின் அனுமதி பெறாத லாட்டரி டிக்கெட்டுகளை விற்பது சட்டப்படி குற்றமாகும். டிக்கெட் புத்தகங்களையும் அடிக்கட்டைகளையும் போலீசார் பறிமுதல் செய்வர். அதனால், டிக்கெட் வாங்கியவர்களுக்கு இழப்பு ஏற்படும்."

# 6,700 பேர் மனு

## மருத்துவக் கல்லூரியில் சேர!

சென்னை, ஜூன் 20—

தமிழகத்தில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர 6,700 மாணவர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

கடந்த ஆண்டைவிட அதிகமாக 2,300 பேர் இந்த ஆண்டு விண்ணப்பம் செய்துள்ளனர்.

### பொறியியல் கல்லூரி

தமிழகத்திற்கு வெளியே இருந்துவரும் மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரியிலும் தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேர இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இட ஒதுக்கலின்படி, கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரியில் 17 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தமிழகம் தவிர்த்த இந்திய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் 14 பேரும், வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் 3 பேரும் ஆக 17 பேர் அந்தக் கல்லூரியில் சேர இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கோவையில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் வெளி மாநிலத்தையோ—வெளிநாடுகளையோ சேர்ந்த இரு மாணவர்கள் சேர இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# 'கோல் கோடாத' கொள்முதல் நடவடிக்கை

## அரசுக்கு மக்கள் அளித்திட்ட ஒத்துழைப்பு

கடந்த மூன்று திங்களாக, உணவு விலைகளைக் குறைக்கும் வகையிலே எங்ஙனம் செம்மையான ஏற்பாடு ஒன்றைத் தொடங்கலாமென்றும், அதன் பயனாய் நிகழ்ச்சிகள் தொடர்ந்து விளையும் வகையிலே எவ்வாறு அது அமையவேண்டும் என்பது குறித்தும் அரசு ஆலோசித்து வந்துள்ளது.

உணவுத் தானியக் கொள்முதலை மும்முரப்படுத்துவதன் மூலம் சட்ட பூர்வமாகவோ, அன்றி முறைப்படியின்றியோ உணவு தானியப் பங்கீட்டுப் பொறுப்பினை அரசு ஏற்றுக்கொண்ட பகுதிகளில், கட்டுப்பாட்டிற்குட்பட்ட பங்கீட்டுக் கடைகளின் வாயிலாக உணவுத் தானியங்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கும் வகையில் கொள்முதல் மும்முரப்படுத்தப்பட வேண்டுமென்பதே அரசு மேற்கொண்ட முதல பெரிய கொள்கை முடிவாகும்.

இது எளிதான செயல் அல்ல; ஏனெனில், கொள்முதலுக்கு மிகவும் ஏற்ற காலமான சனவரி, பிப்ரவரித் திங்களிலே உணவுத் தானியக் கொள்முதல், நான் இங்கே எடுத்தியம்ப விரும்பாத—வேண்டாத பற்பல காரணங்களினால் முனைப்பாக நடைபெறவில்லை.

சம்பா அறுவடை முடிந்து நீண்ட நாட்கள் கழித்த பின்னர், மார்ச்சுத் திங்கள் நடுவிலிருந்துதான் கொள்முதல் வேலைகளைத் தொடங்க முடிந்தது.

உணவுத் தானியப் பதுக்கலையும் கள்ளக் கடத்தலையும் ஒடுக்க மும்முர நடவக்கைகளை மேற்கொண்டதால், நடந்துபோன நாட்களிலே கழிந்துபோன இழப்பினை எங்களால் மீண்டும் சரிகட்ட முடிந்து, கொள்முதல் திட்டத்தைப் பெருமளவு வெற்றிகரமாய் முடித்திருக்கிறோம்.

உழவர்களுக்கு அதிக இன்னல் இழைக்காமலும், 'கோல் கோடியது' என்று கடுமையாகக் குறைகூற இடங்கொடுக்காமாலும், 5 இலட்சம் டன் உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்ய முடிந்தது என்றால் பொதுமக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் அரசுடன் ஒத்துழைத்திருக்கிறார்கள் என்பதற்கு அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்றே நான் கருதுகிறேன்.

சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் உள்ள 31 இலட்சம் மக்களும், முறைப்படியற்ற (informal) பங்கீட்டுப் பகுதிகளிலுமுள்ள 1.23 இலட்சம் மக்களுக்கு இன்று ஒழுங்காக உணவுத் தானியங்களைப் பெற்று வருகின்றனர். வெளிச்சந்தையில் உணவுத் தானிய விலைகள் கட்டுக்கு மீறிப்போகாமலிருக்கவும் இது உதவியிருக்கிறது.

—தமிழக அரசின் 1967–68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநில மக்களை மெலிய விட்டுவிட்டு, மத்திய அரசு தேடிப் பெறும் எந்தப் பொருளாதார வலிவும், இந்திய அரசியல் அமைப்புக்குக் குந்தகம் விளைவிப்பதாகவே இருக்கும்.

இந்த உண்மையை மறந்துவிட்டு, 'வலிவான மத்திய அரசு இல்லையேல், மாநிலங்கள் இயங்க முடியாது' என்று—அரசியலும் தெரியாமல் பொருளாதாரமும் புரியாமல் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை!

அண்ணா அவர்களின் பட்ஜெட், ஒரு நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல—அதனை உள்ளடக்கிய ஓர் அரசியல் நிலை விளக்கமும் ஆகும்.

—எஸ். ஆர்.

# அண்ணவும் துங்குவும் சனநாயகக் காவலர்கள்

## மலேசியாவில் என். வி. நடராசன் விளக்கம்

புக்கிட் மெர்டாஜம், சூன் 12—

"உலக அமைதி ஊசலாடிக் கொண்டிருக்கிறது; அமைதியின் உயிர் சனநாயகம்; 'சனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும்' என்று பாடுபடும் அரசியல் மேதைகளில் மலேசியத் தலைமையமைச்சர் துங்கு, முன்னணியில் இருக்கிறார். அவருடைய நாட்டில் உண்மையான சனநாயகம் உதயமாகியிருக்கிறது. எந்த நாட்டில் சனநாயகம் பாதிக்கப்பட்டாலும் அந்நாட்டிற்கு உதவுவதில் துங்கு முந்திக்கொள்கிறார்"

என்று, இங்குள்ள சீனர் மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தி. மு. க. அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கூறினர். தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:-

"துங்குவின் சனநாயக வழியில் செல்பவர் தமிழக முதல்வர் அண்ணா; அவருடைய புதிய ஆட்சியில் சனநாயகம் வேரூன்றி இருக்கிறது; மலேசியத் தலைமையமைச்சரும்," தமிழக முதல்வரும் சனநாயகத்தின் காவலர்கள்!

முத்தமிழின் நடுநாயகமாய்த் திகழ்வது இசைத் தமிழ்; இசைத் தமிழ் வளர்ச்சியில் பலர் தீவிரத் தொண்டாற்றி இருக்கிறார்கள். செட்டி நாட்டரசர் இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரின் இசைப் பணியைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. தமிழகத்தில் அவர் எழுப்பிய இசை மண்டபம் இருக்கிறது.

தமிழறிஞர் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்றவர்களும் தமிழிசைக்கு உயிரூட்டி உள்ளனர். அமெரிக்காவில் இருந்தபோது அவர், தமிழ் நாட்டு உணவையே விரும்பினார். அதைப் போன்று தமிழ் இசையைப் போற்றினார்; 'தாய்நாட்டின் முறைப்படி சமைக்கப்படும் உணவை ஒருவன் உண்ணும்போது ஏற்படும் உவகையைப் போன்று, தாய் மொழியில் இசையை சுவைக்கும்போது உள்ளம் துள்ளுகிறது' என்று பலமுறை அவர் கூறியிருக்கிறார்."

இசைக் கலை வளர்ச்சி பற்றிப் பேசிய என். வி. என்., புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் அரிய பண்புகளைப் பாராட்டிவிட்டுக் குறிப்பிட்டதாவது:—

"எம். ஜி. ஆரின் உயர்ந்த உள்ளத்திற்காக மட்டுமே அவரை மலேசியத் தமிழர்கள் புகழ வேண்டும். அவருடைய கட்சிக்கும்—இங்குள்ள தமிழர்களின் நிறுவனங்களுக்கும் தொடர்பு இருக்கிறதா என்ற சந்தேகங்களுக்கு இடங்கொடுக்கும் நடவடிக்கைகளை மலேசியத் தமிழர்கள் கைவிட வேண்டும்."

### மா. தங்கவேலர்

எழுத்தாளர் மா. தங்கவேலர் பேசுகையில் கூறியதாவது:—

"சீனர்கள் சிறந்த முறையில் முன்னேறி இருக்கிறார்கள். மலாய்க்காரர்களின் வளர்ச்சியும் சிறப்பாக அமைந்திருக்கிறது. உரிமைகள் பல பெற்று இந்தியர் சமூகம் உயரவேண்டும்.

மலேசியாவின் முக்கிய நகரங்களில் சுற்றுலா மேற்கொண்டு வரும் நாங்கள், மற்ற இனத்தவரின் நல்ல வாழ்க்கை முறையைக் காணுகிறோம்.

தமிழர்கள், தெரு ஓரங்களில் சீட்டாடுவதிலும், கள்ளுக்கடையில் கூடுவதிலும் கவனம் செலுத்துகிறார்கள். இத்தகைய போக்கு அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கிறது; வெளிநாட்டிலிருந்து வரும் தமிழர்களுக்கு வேதனை அளிக்கிறது.

சுங்குரும்பைக்கு வரும் வழியில் நெஞ்சு பொறுக்காத இத்தகைய காட்சிகளைக் கண்டேன். அதே சமயத்தில், தொழில் துறையில் மலேசியா கண்டுவரும் முன்னேற்றத்தையும் பார்த்தோம்."

தமிழ் இளைஞர் மணி மன்றத்தின் சார்பில் தமிழகத் தலைவர்களுக்கு வாழ்த்து இதழ்கள் வழங்கப்பட்டன.

தங்கப் பதக்கங்கள் அணிவித்து தலைவர்களை கௌரவித்தது—மன்றம்.

---


## 'நம் நாடு'

நாளைய இதழில்

★

**'அண்ணாவின் பட்ஜெட்—சமுதாயச் சாதனை'**

என்ற கட்டுரை இடம்பெறும்


---

## பண்டாவின் பேச்சு ....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்யலாம். திருமதி பண்டார நாயகாவோ எதிர்க் கட்சித் தலைவியே ஒழிய அரசுச் சார்புடையவரல்லர். அங்குள்ள அரசு இந்த அரசைப்பற்றி நல்லவிதமாகவே கருத்துக் கொண்டுள்ளது."

"இலங்கையில் இந்தியாவின் தூதுவராக ஒரு தமிழரை நியமிக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் ஏற்கனவே முறையிட்டிருக்கிறோம்."

---

## பரபரப்பைக் கொடுத்த அசாரி அறிக்கை

### இறுதிப் பகுதி ஆகஸ்டில் வெளிவருகிறது

நாளிதழ்களிலும், நாடாளுமன்றத்திலும் பெரும் பரபரப்பைக் கொடுத்த அசாரி அறிக்கையின் இறுதிப் பகுதி ஆகஸ்டு மாத முடிவில் வெளிவரவிருக்கிறது.

இத்தகவலை பம்பாயில் நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் பேராசிரியர் அசாரியே கூறியுள்ளார்.

நாட்டின் தொழில் வளர்ச்சியில் பிர்லாவின் குடும்பம் பெற்றுள்ள முறையற்ற வளர்ச்சி பற்றியும், மத்திய அமைச்சரவையில் இரு உறுப்பினர்கள் பிர்லாவின் சம்பளப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது குறித்தும் அதிர்ச்சியூட்டும் கண்டுபிடிப்புகளை அசாரி, தனது அறிக்கையின் முதல் பகுதியில் எடுத்துரைத்திருக்கிறார்.

பம்பாய்ப் பல்கலைக் கழகத்தில் தொழிலியல் பொருளாதாரப் பேராசிரியராக இருக்கும் அசாரி, பல்கலைக் கழக மானியக் கமிஷனில் பணியாற்றுகிறார்.

35 வயது மட்டுமே நிரம்பப் பெற்ற அசாரி, தனது அறிக்கையின் இறுதிப் பகுதியினை வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார் — அச்சுறுத்தல்களுக்கு ஆளாவார்— என்ற ஒரு வதந்தி இருப்பதனை, அவர் மறுத்திருக்கிறார்!

---

# டி. எம். பார்த்தசாரதி மகன் திருமணம்

## அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது

தி. மு. க. வரலாறு எழுதியவரும் பொதுக் குழு உறுப்பினருமான திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்களின் மகன் செல்வன்: கல்யாணசுந்தரத்துக்கும்—செல்வி: கிரிஜா பாய்க்கும், 18—6—67 அன்று திருமணம் நடைபெற்றது.

திருமண விழாவுக்குத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்கள்.

மணமக்களை வாழ்த்தி, அட்வகேட்-ஜெனரல் திரு. கே. நாராயணசாமி (முதலியார்), அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து, சாதிக் பாட்சா, மற்றும் தோழர்கள் க. இராசாராம் எம்.பி., க. அறிவழகன் எம்.ஏ., சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., பலராமன், சேலம் மாணிக்கத்தம்மாள் ஆகியோர் பேசினர்.

திரு. டி. எம். பார்த்தசாரதி அனைவரையும் வரவேற்று நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், அன்பளிப்புக்களும் வந்திருந்தன.

---

# சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

## கோடம்பாக்கம் கிளை அமைப்பு

தமிழ்நாடு சலவையாளர் மத்திய சங்கத்தின்கீழ் இயங்கிவந்த கோடம்பாக்கம்—சூளைமேடு பகுதி சலவையாளர்கள் -- லாண்டிரிக்காரர்கள் சார்பில், தோழர் கே. முனுசாமி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

"நாங்கள் கடந்த 25 ஆண்டுக் காலமாக மேற்படி சங்கத்தில் இருந்தும் எந்தவிதப் பயனும் கிட்டவில்லை; எனவே, மத்திய சங்கத்திலிருந்து விலகி, முன்னேற்றச் சங்கத்தில் இணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளோம்.

சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கிளை அமைக்கும் பொருட்டு 25—6—67 காலை, அமைப்புக் கூட்டம், கோடம்பாக்கம்—புலியூர் சிவன் கோயில் தெரு பின்புறம் உள்ள சலவைத் துறையில் நடைபெறும்; இக்கூட்டத்திற்கு, சலவையாளர்கள் அனைவரும் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இது தொடர்பாகக் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ள வேண்டுகிறேன்:—கே. முனுசாமி, அமைப்பாளர், 1-1/5, வெள்ளாளத் தெரு, புலியூர், சென்னை-24.

---

# தி.மு.க. அமைச்சர்கள் செயல் திறம்

## ம. பொ. சிவஞானம் பாராட்டு

சென்னை, சூன் 20—

"தமிழகத்தில் தி. மு. கழகம் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறது; ஆட்சியில் அமர்ந்துள்ள அமைச்சர்களும் அமைச்சரவைக்குப் புதியவர்கள்தாம்; இருந்தாலும், அவர்கள் அளித்துள்ள முதல் வரவு - செலவுத் திட்டம் தெளிவாகவும், சிறப்பாகவும் அமைந்திருக்கிறது; 'தமிழகத்தை, ஆளும் அமைச்சர்கள் திறமையானவர்கள்' என்பதை எடுத்துக்காட்டுகிறது"

என்று இங்கு நடைபெற்ற தி.மு. கழகக் கலை நிகழ்ச்சி அரங்கேற்ற விழாவில் பேசுகையில், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

சென்னை 88-வது வட்டம் திருவள்ளுவர் சாலையில், சுந்தரம் குழுவினரின் 'நடந்ததும் – நடப்பதும்' என்ற கலை நிகழ்ச்சியின் அரங்கேற்ற விழா நடைபெற்றது.

தோழர் ஜி. முனுசாமி தலைமை வகித்தார்.

திரு.ம.பொ. சிவஞானம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சாதியால் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்ல — பொருளாதாரத்தால் தாழ்த்தப்பட்ட மக்களும் கல்லூரியில் புகுமுக வகுப்பில் இலவசமாகப் படிக்கத் தமிழக அரசு வகை செய்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி, பக்தவத்சலத்தின் பேரனோ, மன்றாடியார் மகனோ இலவசமாகக் கல்வி பெற முடியாதே தவிர, ஏழை மக்கள் கல்வி பெற முடியும்.

"பஸ் தொழிலைத் தேசியமயமாக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது; இதைக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பஸ் அதிபர் மகாலிங்கமும் வரவேற்கிறார். சுதந்தராக் கட்சித் தலைவர் இராஜாஜியும் எதிர்க்கவில்லை. அந்த அளவில், இத்திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்துகிறது."

---

# ஆட்டுவிக்க ஆடுகிறார் அஜாய் முகர்ஜி

## வெளியேறிய உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

நருண் நபி, சுதர் சந்திரா என்ற இரு வங்காளக் காங்கிரசு உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், 'முதலமைச்சர் அஜாய் முகர்ஜி, வெறும் பொம்மை போல! ஆதிக்கம் நடத்துவது மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சிதான்!' என்று கூறியுள்ளனர்.

'வங்காளக் காங்கிரசுக் கட்சி'யின் அமைச்சரவை உறுப்பினரான சுனில் தாரா, தனது கட்சியிலிருந்து இன்னும் சிலர் வெளியேறக் கூடுமெனத் தாம் கருதுவதாக அச்சம் தெரிவித்துள்ளார்.

---

# திருமணச் செலவைக் கல்விக்குச் செலவிடுக!

## அமைச்சர் நெடுஞ்செழியன் யோசனை

சென்னை, சூன் 20—

"திருமணங்களுக்காக ஏராளமாகப் பணம் செலவு செய்வது நல்லதல்ல; அந்தப் பணத்தைக் குழந்தைகளின் நன்மைக்குப் பயன்படுத்தலாம்"

என்று, கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினர்.

கிண்டி தொழில் பேட்டைக் காலனி பள்ளிக்கு அடிக்கல்நாட்டு விழா நடைபெற்றது.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"நண்பர்களையும், உறவினர்களையும் திருமணத்திற்கு அழைத்துப் பணம் செலவு செய்வதைக்காட்டிலும் அந்தப் பணத்தை, அந்தக் குடும்பத்தின் கல்விக்குப் பயன்படுத்தலாம்.

"பணக்காரர்கள் பள்ளிக் கட்டிடங்களுக்கும், பள்ளித் தளவாடங்களுக்கும் நன்கொடை அளிக்க முன்வரவேண்டும்."

---

# சட்டவிரோதச் செயல்கள்

## தடுத்து நிறுத்த உத்தரவு

கல்கத்தா, சூன் 22—

சட்டவிரோதச் செயல்கள் மாநிலத்தின் எந்தப் பகுதியில் நடைபெற்றாலும், அதனை உறுதியுடன் தடுத்துநிறுத்துமாறு போலீசுத் துறையினருக்கு மேற்கு வங்க அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் எவராயினும்—எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களை வளைத்துப் பிடிக்குமாறு போலீசார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

---


## பாலர் அரங்கம்

ஜூன் 23, 24-ந் தேதிகளில் மாலை 4-மணிக்கு

**"டார்ஜானும் வேங்கைப் பெண்மணியும்"**

கட்டணம் வழக்கம்போல்


---

# நடக்க இருப்பவை

## 23--6--67

### சென்னை 41-வது வட்டம்

எம். ஜி. ஆர். மறுமலர்ச்சி மன்றத் திறப்பு விழா; மாலை 7-மணிக்கு திம்மசாமி தர்கா திடலில்; தலைவர்: பெ. மா. துரைராசன்; பேசுவோர்: அமைச்சர் முத்துசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ. ஆர். கிருட்டினன், இராசாங்கம், வி. எஸ். கோவிந்தராசன், மற்றும் டி. கே. பொன்னுவேலு பி.ஏ., த. லா. கோவிந்தசாமி, மற்றும் பலர்.

### சென்னை 23-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் நன்றியறிவிப்புக் கூட்டம்; மாலை 6 மணிக்கு மீனும்பாள் நகரில்; தலைவர்: க. மதிவாணன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து; க. அறிவழகன் எம்.ஏ., எஸ். இராகவானந்தம் எம்.சி., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., எஸ்.எம். துரைராஜ் எம்.எல்.ஏ., ஆர். ஆறுமுகம் எம.சி., எஸ், என். திராவிடமணி, ஆர்.அரங்கநாதன், ஆர். வெங்கடேசன்.

---

# அவைத் தலைவர் மீது அவதூறாக எழுதிய ஏடு

## சட்டமன்றத்தில் உரிமைப் பிரச்சினை

மதுரையிலிருந்து நெடுமாறன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'குறிஞ்சி' என்னும் ஏட்டில், தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவரைக் குறித்து அவதூறாக எழுதப்பட்டிருந்ததாகச் சட்டமன்றத்தில், உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியத்தால் ஓர் உரிமை மீறல் சிக்கல் எழுப்பப்பட்டது.

இது குறித்து, அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தமது கருத்தை அறிவித்ததாவது:—

"இது, 'உரிமை மீறல்தான்' என்பது எனது கருத்து. பத்திரிகைகளுககு இருக்கும் எழுத்துரிமை — கருத்துரிமை—செயலுரிமை ஆகிய அனைத்தையும் பார்த்த அளவிலும், இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறது. இதன்படி அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க சட்டமன்ற உரிமைக் காப்புக் குழுவுக்கு விட ஆதாரம் இருக்கிறது; எனினும், இந்தக் கட்டுரையின் ஆசிரியர், 15—5—67 'குறிஞ்சி' இதழில் இப்படி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் என்ற செய்தியே இங்கு அவையிலுள்ள பல உறுப்பினர்கட்கு இப்போதுதான் தெரியவந்திருக்கிறது. இப்படி ஒரு பத்திரிகை இருப்பதே பலருக்குத் தெரிந்திருக்க முடியாது.

"எனவே, இந்த மதிப்பு வாய்ந்த பேரவையின் அதிகாரத்தைப் பயன்படுத்தும் அளவுக்கு இது ஒரு பெரிய காரியமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சின்னஞ்சிறிய ஏட்டின் சின்னஞ்சிறிய காரியத்தைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை என்றே கருதுகிறேன். இந்தப் பிரச்சினை இப்போது கொண்டுவரப்பட்டதையே அந்த ஏடு தனக்கு ஒரு எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டுமெனக் கூறி இதனை நான் தள்ளுபடி செய்கிறேன்."

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.